## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2018–ம் ஆண்டு மே மாதம் 09–ம் தேதி (09.05.2018) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது .

திரு.க.சரவணகுமார்
தனி அலுவலர் / ஆணையாளர்

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.1406/2017/ஆ–1, நாள் : 04.05.2018–ன் படி, தெருவிளக்கு பணிகளுக்கான IGA (Investment Grade Audit) Conduct செய்வதற்கு ESCO நிறுவனத்திற்கு தொகை செலுத்துவதற்கு இந்நகராட்சி சார்பாக ரூ.2,55,026/–ஐ நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலிக்கு செலுத்த நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/763/2017

**தீர்மானம் எண்.1826 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் (TURIP) கீழ், ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் தேர்வு செய்து முன்மொழிவு சமர்ப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 09.05.2018–ம் தேதிய தொலைபேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் கீழ்காணும் சாலை பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி – திருவள்ளுவர் சாலையில் (பவுண்டரி சாலை) தார் சாலை அமைத்தல் | 0.800 | 25.00 |
| 2 | குளச்சல் நகராட்சி – சாஸ்தான்கரை பகுதியில் (தமிழ்நாடு அரசு பணிமனை பின்புறம்) தார் சாலை அமைத்தல் | 0.500 | 25.00 |
| 3 | குளச்சல் நகராட்சி –சைமன்காலனி பாலம் சாலையில், சைமன் காலனி பாலம் முதல் மாதா காலனி குறுக்கு தெரு வரை தார்சாலை அமைத்தல் | 0.490 | 25.00 |

| | | | |
|---|---|---|---|
| 4 | குளச்சல் நகராட்சி – சிஙகன்காவு சாலையில் நரிக்கல் முதல் சமையல் எரிவாயு சேமிப்பு கிடஙகு அருகில் வரை (கேஸ் குடோன்) தார் சாலை அமைத்தல் | 0.510 | 25.00 |
| | **மொத்தம்** | **2.300** | **100.00** |

மேற்காணும் சாலை பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூ.100.00 இலட்சத்திற்கான மதிப்பீடுகளுக்கும், அதற்கான நிதியினை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முழு மானியமாக விடுவிக்க கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு முன் மொழிவு சமர்ப்பிக்கவும் மன்ற அங்கீகராத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.இ1/650/2018

**தீர்மானம் எண்.1827 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள IHHL கட்டி முடிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பறைகளை இடிப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் தலைமையில் கடந்த 07.03.2018–ல் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டது. அதை தொடர்ந்து நடைபெற்ற மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில் சமுதாய கழிப்பறை இடிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து கோரப்பட்டது. நேரடி ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட சமுதாய கழிப்பறைகளை அப்புறப்படுத்தப்பட்டது என துப்புரவு ஆய்வாளராய் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1. கொட்டில்பாடு
2. அந்தோணியார் காலனி
3. சாம்பசிவபுரம் (துறைமுகசாலை பின்புறம்)
4. மரமடி பேருந்து நிறுத்தம் அருகில்

மேற்காணும் சமுதாய கழிப்பறைகளை இடித்து அப்புறப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.472/2018/எச்1

**தீர்மானம் எண்.1828 அங்கீகரிக்கப்பட்டது.**

ஆணையர்/தனி அலுவலர்,
குளச்சல் நகராட்சி